# GENERAL OBSERVATION – AUGUST

- 04.08.2014 ஆம் நாள்ஆடிப்பெருக்கு விழா ஏடு கலசங்களை வைத்து ஏடு ஆறுகளையும் பற்றி விளக்கிக் கூற நன்றாகச் கொண்டாடப்பட்டது. கலசம் அலங்கரிக்கும்போது குழந்தைகளும் இணைந்து பூக்களை எடுத் வைத்து ஆர்வமாக அலங்காரம் செய்தனர்.

- 08.08.2014 ஆம் நாள் வரலெட்சுமி நோன்பு எட்டு லெட்சுமிக்குரிய உபகரணங்களை வைத்து சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. அனைத்துப் பெற்றோர்களும் இவ்விழாவில் கலந்துகொண்டனர். பூஜை முடிந்தவுடன் அனைவருக்கும் நோன்புக்கயிறு வழங்கப்பட்டது. குழந்தைகளுக்கும் நோன்புக்கயிறு அணிவிக்கப்பட்டது.

- அமெரிக்காவிலிருந்து திரு.ஸ்ரீகாந்த் அவர்கள் 01.08.2014 அன்று செந்துறை நம்ம வீடு மையத்திற்கு வருகை தந்து பார்வையிட்டார். அனைத்து ஆசிரியர்கள் மற்றும் உதவியாளர்களுடன் பள்ளி நிகழ்வுக பற்றி உரையாடினார்.

- உணவு, உடை, குழந்தை வளர்ப்பு பற்றிய விழிப்புணர்வு பிரதிகள் பெற்றோருக்கு வழங்கப்பட்டது. சில பெற்றோர்கள் நன்றாக உள்ளது நாங்கள் இதைக் கடைபிடிக்கிறோம் என்று கூறினர். ஒருசில பெற்றோர் எல்லா நாளு இது போன்ற பயிர் வகைகள் கொடுத்துவிடுவது சற்று சிரமமாக உள்ளது இருந்தாலும் நாங்கள் முயற்சி செய்கிறோம் என் கூறினர். ஒரு சிலர் எங்கள் குழந்தைக்கு ஒன்றரை வயதே ஆவதால்(hariharan, jefrey) பிஸ்கட் மட்டுமே அதிகமாக சாப்பிடுவதாகத் தெரிவித்துள்ளனர்.

- 14.08.2014 ஆம் நாள் சுதந்திரதினம் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. தேசியக் கொடியில் உள்ள வண்ணங்களை அறிமுகப்படுத்தி உதவி செய்ய வேண்டும் என்று கூறிய போது ஹரீஷ் மற்றும் ஜெயஸ்ரீ போன்றோர் "அத்தை நான் வீட்டி என் அம்மாவிற்கு உதவி செய்வேன்" என்று கூறினார்கள். நம்முடைய பொருட்களை பத்திரமாக வைத்துக்கொள்ள வேண்டும் என் று கற்றுக்கொடுத்தபோது சாம் "

அத்தை நான் என்னுடை பொருட்களை பத்திரமாக வைத்துக்கொள்வேன்" என் கூறினா . தாயின்மணிக்கொடிப் பாடலைப் பாடியபோது அனைத்துக் குழந்தைகளு மிகுந்த அமைதியோடு கவனித்தனர். "ஜெய்ஹிந்த்" என்று கூற கொடிக்கு சல்யூட் செய்த போது அனைவரும் மகிழ்ச்சியோடு அதை செய்தனர். கொடிக்கு வண்ண தீட்டிய போது சந்தோஷத்தோடு அனைவரும் வண்ணம் தீட்டி மகிழ்ந்தனர்.

- இந்த மாதத்தில் இரண்( குழந்தைகள் புதியதாக சேர்ந்துள்ளனர்.(இருவருக்கும் ஒன்றறை வயது )

- 14.08.2014 ஆம் நாள் கிருஷ்ணஜெயந்தி விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. அனைத்து குழந்தைகளும் சந்தோஷமாகக் கலந்து கொண்டனர். ஒருசில குழந்தைகளுக்கு கிருஷ்ணன் மற்றும் ராதை வேடம் அணிவிக்கப்பட்டது. மற்ற குழந்தைகளு ஆர்வத்தோடு அதை கவனித்தனர். கிருஷ்ணனி சிலையை எடுத்து வைத்த உடனே ஜெயஸ்ரீ இன்று கிருஷ்ணனி பிறந்தநாள் என்று சரியாகக் கூறினாள் . கிருஷ்ணன் தன் நண்பர்களுக்கு தன்னிடமிருந்த வெண்ணெயைப் பகிர்ந்துண்ட போல நாங்களும் எங்களிடமிருப்பதை மற்றவர்களுக்கு பகிர்ந்துகொடுப்போம் என்று ஹரீஷ் கூறினான் . கிருஷ்ணனி பாதத்தைப் பார்த்து இது என்ன என் கேட்ட ஜெயஸ்ரீக்கு ஆசிரியர் (இதுதான் கிருஷ்ணனின் பாதச்சுவடு , நம் பள்ளிக்கு கிருஷ்ணன் நடந்து வந்துள்ளார்) பதில் கூறியவுட அதைப் பற்றி ஆர்வத்தோடு கேட்டுத் தெரிந்துகொண்டாள். நந்தலாலாவுக்கு குழந்தைகள் ஆர்வத்துடன் அலங்காரம் செய்தனர். இது போல நாமும் குளித்து சுத்தமாக இருக்கவேண்டு என்று கற்றுக்கொடுக்கப்பட்டது.